ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1999/37 - 2016 දෙසැම්බර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.12.29

*1999/37 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு மாகதுர நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் மேம்படுத்தல் நீர் இறைக்கும் இயந்திரசாலை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழே அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, திசெம்பர் 07,
5/2/2/1242.

**அட்டவணை**

மாத்தறை மாவட்டத்தில், முலடியன பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 302 பி தித்தெனிபொத வடக்கு அலவதுகொட கிராம அலுவலர் பிரிவில், தித்தெனிபொத கிராமத்தில் அமைந்துள்ள, ரங்சகொடகே, திவெல்வத்த கனத்த என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து 2 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | தித்தெனிபொத மஹா வித்தியால வீதி ; |
| கிழக்கு | : | தித்தெனிபொத மஹா வித்தியால வீதி ; |
| தெற்கு | : | மாகதுர இல் இருந்து முலடியன வரையான பிரதான வீதி ; |
| மேற்கு | : | வீட்டுக் காணி. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: 1. திருமதி ஆர். எல். கருணாவதி,
இல. 66,
தித்தெனிபொத - முலடியன.

12- 393



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.